# தமிழ் வளர்ச்சிக் கழகம்
# செய்தி மின்மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும் 1:7 டிசம்பர் 2025

## உங்களுடன்

வணக்கம்.

தமிழ்ப் புத்தாண்டு-பொங்கல்
வணக்கமும் வாழ்த்தும்.

சூரிய வணக்கத்தோடு கொண்டாடுவோம்
புத்தாண்டை!
ஏனெனில், காலத்தின் கடிவாளம்
சூரியன் கையில்!

புதிய ஆண்டு தொடங்கும்போது
2025ஆம் ஆண்டில்
அறங்காவல் குழு, ஆட்சிக்குழு,
பொதுக்குழு ஒத்துழைப்போடு
மேற்கொண்ட கணக்குகளும் செயற்பாடுகளும்
கண்முன் விரிகின்றன.

தமிழ்நாடு அரசின்வழி
மாண்புமிகு முதல்வர்
திரு மு.க.ஸ்டாலின் அவர்கள்
2 கோடியே 15 இலட்சம் ரூபாய்
வழங்கியிருக்கிறார்.
80 ஆண்டுக் கால வரலாற்றில்
தமிழ் வளர்ச்சிக்கழகம்
அதிக நிதி உதவி பெற்ற ஆண்டு!

தேங்கியும் ஏங்கியும் கிடந்த
தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்குப்
புத்துயிர்ப்பு வழங்கி,
பணிகளை முடுக்கிவிட்டு, ஊக்கப்படுத்திவரும்
மேனாள் ஒன்றிய நிதி அமைச்சர்
திரு ப. சிதம்பரம் அவர்கள்
அறங்காவல் குழுத் தலைவராக
இசைந்த ஆண்டு.

தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு
ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி திரட்ட
மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சியில்
ஆட்சிக்குழு உறுப்பினர்
சிவாலயம் திரு ஜெ. மோகன் தொடங்கித்
தொழிலதிபர் திரு சந்திர மோகன்,
திருச்செங்கோடு திரு கந்தசாமி மாணிக்கம்
என்று ஆளுக்குப் பத்து இலட்சமாக
30 இலட்சம் ரூபாய் பெற்ற ஆண்டு.

அறங்காவல் குழுத் தலைவரும்
உறுப்பினர்கள் திரு முஸ்தஃபா அவர்களும்
திரு சௌரிராசன் அவர்களும்
ஆளுக்கு ரூ. 10 இலட்சம்
அளிக்க முன்வந்த ஆண்டு.

தமிழ் வளர்ச்சிக் கழக நூல்களுக்கு
உரிமைத் தொகையாக 30 இலட்சம் ரூபாய்
கிடைத்த ஆண்டு.

நீண்டகாலக் கோரிக்கையாக இருந்த
தமிழ் வளர்ச்சிக் கழக அறை உரிமையை
மீட்டெடுத்த ஆண்டு.

நீண்ட நாளைக்குப் பிறகு
தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடாக
ஒரு களஞ்சியம் - நாடகவியல் களஞ்சியம்
தயாரான ஆண்டு.

கடந்த 6 ஆண்டுகளாகத் தணிக்கை
செய்யப்படாமல் விடுபட்டிருந்த கணக்குகள்
சீர் செய்யப்பெற்றுத் தணிக்கைக்கு
அளிக்கப்பட்ட ஆண்டு.

தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு நன்கொடை
அளிப்பவர்களுக்கு 80 (G) வருமான வரி
விலக்குப் பெற்ற ஆண்டு.

வங்கி நடப்புக் கணக்கில்
இருப்பு ரூ. 21,001 என்பது 2024.
வங்கி நடப்புக் கணக்கில்
இருப்பு ரூ. 25,28,713 என்பது இந்த ஆண்டு.

தமிழ் வளர்ச்சிக் கழகக் கணக்கில்
இருப்பும் வைப்புமாக
2024ஆம் ஆண்டில் இருந்த ரூ.18,14, 476,
ரூ.2,93,51,088 என்று ஆகியுள்ளது
இந்த ஆண்டு.

வைப்புத் தொகையாக 2024இல் ரூ.18,12,375.
ரூ.2,68,22,375 ஆகப் பெருகியுள்ளது
இந்த ஆண்டு.

2024இல் திட்டப் பணி ஏதும்
மேற்கொள்ளப்படவில்லை;
2025இல் ஆறு திட்டப் பணிகள்.

மேலும், மாணவர்களுக்கு
இணையத்தமிழ்ப் பயிற்சி.

சொல் புதிது கூட்டங்கள் எட்டு.
இறுதி செய்யப்பட்ட சொற்கள் 251.

வாரம்தோறும்
திட்டப்பணி முன்னேற்ற ஆய்வுக் கூட்டம்
என்று 2025ஆம் ஆண்டு.

அரிமா நோக்காகத் திரும்பிப் பார்த்துப்
பணிகளை முன்னெடுப்போம்
வழக்கம் போல.

நன்றி!
ம. ரா.



# சொல் புதிது – 8

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்
*சொல் புதிது* என்னும் திட்டத்தின்
எட்டாவது கூட்டம்
தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில்
17.12.2025 புதன்கிழமை
முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்றது.
இக்கூட்டத்தில்
முடிவு செய்யப்பெற்ற
சொற்கள் வருமாறு:



| வ.எண் | ஆங்கிலம் | தமிழ் | வ.எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|---|---|
| 1 | Life writing | வாழ்வெழுத்து | 17 | Facetious | பொருந்தா நகை |
| 2 | Poop suitcase | மனிதக் கழிவுப் பெட்டி | 18 | Iconoclast | கலகக்காரர் |
| 3 | Fibonacci day | ஃபிபோனஸ்ஸி நாள் | 19 | Physical flashcard | விளக்க அச்சு அட்டை |
| 4 | Rage bait | கெடு உணர்வுத் தூண்டி | 20 | Digital flashcard | விளக்க மின் அட்டை |
| 5 | Reps | மீள் பயிற்சி | 21 | Gigil | பேருணர்வு |
| 6 | Microgreens | நுண்ணுயிர்ப் பயிர் | 22 | Alamak | ஐயோ |
| 7 | Quandary | ஊசலாட்டம் | 23 | Yoh | ஓ |
| 8 | Conundrum | பெருஞ்சிக்கல் | 24 | Ludraman | மட்டி |
| 9 | Strong room | காப்பறை | 25 | Tumbleweed | மரக்கட்டை |
| 10 | Collogen | தசை வலுவூட்டி/ தசைநார் வலுவூட்டி | 26 | Hidden gem | மறைமணி |
| 11 | Match fixing | ஆட்டச் சூது | 27 | Dowdy | ஈர்ப்பற்ற |
| 12 | Sky ball | மீவுயர் பந்து | 28 | Kidult | முதுகுழவி |
| 13 | Skyfall | பெருவீழ்ச்சி | 29 | Hangxiety | போதைப் பின்பதற்றம் |
| 14 | Yorker | குறிவீச்சுப் பந்து | 30 | Promptcraft | கட்டளைத் திறன் |
| 15 | Abnegation | தன்னல நீக்கம் | 31 | Situationship | உறவு மயக்கம் |
| 16 | Athleisure | விளையாட்டுப் பாணி உடை | | | |

எந்தெந்த ஆங்கிலச் சொற்களுக்கு நிகராகத்
தமிழில் சொற்கள் உருவாக்கப்பட வேண்டுமோ
அந்த ஆங்கிலச் சொற்களை
எவரும் அனுப்பலாம்.

# தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் வலைத்தளம் காணீர்!

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் வலைத் தளம் (www.tamilvk.org) பார்த்து, அதனை மேம்படுத்த உதவும் கருத்துகளைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- சொல் புதிது திட்டத்தின்கீழ் ஆங்கிலச் சொற்களுக்கு நிகராக உருவாக்கப்பெற்ற தமிழ்ச் சொற்களின் பட்டியல் மாதந்தோறும் நாளிதழ்களில் வெளியிடப்படுவதோடு நமது வலைத்தளத்திலும் வெளியிடப்படுகின்றன. அவற்றை எவரும் பயன் கொள்ளலாம்.

- இச்சொற்களுள் பல பயன்பாட்டுக்கு வந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது,

- இச்சொற்களுள் பல, தமிழ் விக்சனரி (https://ta.wiktionary.org) என்னும் இயங்குநிலை அகராதியில் (dynamic dictionary) சேர்க்கப் பட்டுவலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.இதனால் உலகெங்கும் உள்ள தமிழர்கள் பயன் பெற முடியும். இந்தப் பணியைச் செய்த நீச்சல்காரன் ராஜாராமன் அவர்களுக்கு நமது பாராட்டும் வாழ்த் தும் உரியன.



- உலகத் தமிழியல் நூல் களஞ்சியம் என்னும் திட்டத்தின்கீழ் இதுவரை 22, 000 நூல்கள் குறித்த விவரங்கள் தொகுக்கப்பட் டுள்ளன. அவற்றுள் 19,305 நூல்கள் பற்றிய விவரங்கள் நமது வலைத்தளத்தில் தேடுதல் வசதியுடன் தரப்பட்டுள்ளன. அவற்றையும் ஆர்வமுள்ளோர் பயன்படுத்திக் கொள்ளலாம்.

- தமிழ் வளர்ச்சிக் கழகம் விரைவில் அச்சில் வெளியிடவுள்ள நாடகவியல் களஞ்சியம், நமது வலைத்தளத்திலும் தேடுதல் வசதியுடன் வெளியிட முயற்சி மேற்கொள்ளப் பட்டுவருகிறது. இப்பணி நீச்சல்காரன் ராஜாராமன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது.


- தமிழியல் கலைக்களஞ்சியம் மூன்று தொகுதிகளாக வெளிவரத்தக்க வகையில் நிறைவை நோக்கி முன்னேறிக் கொண்டுள்ளது. நாடகவியல் களஞ்சியம் போன்றே இதுவும் அச்சிலும், தேடுதல் வசதியுடன் வலைத்தளத்திலும் வெளியிடப் பெறும்.

- தமிழ் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுவரும் திட்டங்கள் அனைத்தும் தமிழ்நாட்டில் வாழும் தமிழர்கள் மட்டுமன்றி, இந்தியாவின் பிற மாநிலங்களிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்கிற தமிழர்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் அமைபவை ஆகும்,

## ஆட்சிக்குழுக் கூட்டம்

**தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம்**
**22.12.2025 திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு**
**முனைவர் ம. இராசேந்திரன் தலைமையில்**
**தமிழ் வளர்ச்சிக் கழகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.**


# நூல் வெளியீட்டு விழா



**தமிழ்ப் பல்கலைக்கழக நாடகவியல் துறையின் முன்னைத் தலைவர் பேராசிரியர் மு. இராமசுவாமி அவர்களது உழைப்பில் உருவான நாடகவியல் களஞ்சியம் என்னும் நூலின் வெளியீட்டு விழா விரைவில்.**

முக்கால் நூற்றாண்டுக் காலத்திய என்னின் ஓட்டத்தில், இந்த இடத்தில், சற்றேறக்குறைய என் அரை நூற்றாண்டுக்கால நாடக அனுபவத்தில், எனக்குள்ளே பதிந்துபோயிருக்கிறவற்றை, என் வாசிப்பு அறிவை, சமூகத்திற்கானநம்பிக்கைத்தடமாக, என் பின்னால் வருகிற தமிழ்ச் சமூகத்தின் பார்வையில் படும்படி, எங்காவது பத்திரப்படுத்திப் பாதுகாத்து வைக்க வேண்டுமென்கிற என் ஆவலை, அதையே நோக்கமாய்க் கொண்டு செயல்படும் 'தமிழ் வளர்ச்சிக் கழக'த்திடம் காரியார்த்தமாக நான் ஒப்படைத்திருக்கிற முயற்சிதான் இந்த நூல்!

- முனைவர் மு. இராமசுவாமி




# பாராட்டு



**சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறைத் தலைவரும் தமிழ் வளர்ச்சிக் கழகப் பொதுக்குழு உறுப்பினருமான பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்கட்குக் கொல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம் 2025 டிசம்பர் 14ஆம் நாள் *சாதனைத் தமிழர்* என்னும் விருது அளித்தது.**

**இவ்விருது பெற்றுள்ள பேராசிரியருக்குப் பாராட்டையும் நல்வாழ்த்தையும் தமிழ் வளர்ச்சிக் கழகம் தெரிவித்துக்கொள்கிறது.**

# நூல் விற்பனை (50% கழிவுடன்)

**தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அனைத்து நூல்களும் 50% சிறப்புக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.**

**தொடர்புக்கு:**

**தமிழ் வளர்ச்சிக் கழகம்**
**மணிக்கூண்டுக் கட்டடம், சென்னைப் பல்கலைக்கழக வளாகம், சேப்பாக்கம், சென்னை 600 005**
**தொலைபேசி: 044-25365440 இணைய வலைத்தளம்: www.tamilvk.org**
**மின்னஞ்சல்: tamilvalarchikazhagam2024@gmail.com**